வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

ஆறாம் தவணைப் பரீட்சை - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**In Collaboration with Provincial Department of Education**

**Northern Province**

**6th Term Examination - 2020**

FWC

இலங்கை வரலாறு - I

**Sri Lankan History - I**

தரம் :- 13 (2020)

மூன்று மணித்தியாலம் 10 நிமிடம்

**கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

## பகுதி – I

❖ இல 1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1. தீபவம்சம் 2. மகாவம்சம் 3. சமந்தபாசாதிகா
4. தர்மபிரதீபிகா 5. வம்சத்தப்பகாசினி ( )

2) 1. முதல் புலஹத்தன் 2. பிளையமாறன் 3. பாகியன்
4. பல்லூகன் 5. பணையமாறன் ( )

3) 1. பரராஜசேகரம் 2. சங்கிலி 3. புவிராச பண்டாரம்
4. அரித்தகி வெண்டு பெருமாள் 5. எதிர் மன்ன சிங்கம் ( )

4) 1. மாந்தை 2. மஹாவொட்டு 3. மாந்தோட்டம்
4. மஹாபுட்டு 5. மஹாகாம ( )

5) 1. ஆனந்தா கல்லூரி 2. தர்மராஜ கல்லூரி 3. றோயல் கல்லூரி
4. இந்துக் கல்லூரி 5. ஹாஹிராக் கல்லூரி ( )

6) 1. அம்பகமுவ கல்வெட்டு 2. தம்புள்ள பாறைக்கல்வெட்டு 3. வாந்துரப்ப சாசனம்
4. இறம்பாவ பலகைச் சாசனம் 5. ரங்கொத் விகாரை தூண் சாசனம் ( )

7) 1. கம்மாரதேவ 2. சித்தராஜ 3. காலவேல
4. சேதியம் 5. வளவாமுகி ( )

8) 1. ஒனெசி கிறீற்ரஸ் 2. மெகஸ்தினிஸ் 3. பிளினி
4. கொஸ்மஸ் 5. செங்ஹோ ( )

9) 1. கோல்புறூக் 2. மோர்கன் 3. மனிங் டெவென்சியர்
4. டொனமூர் 5. சோல்பரி ( )

10) 1. நில அபகரிப்புச்சட்டம் 1840 2. மாநகரச் சட்டம் 1865 3. பாழ்நிலச்சட்டம் 1897
4. பௌத்த நிலமானியங்கள் சட்டம் 1931 5. நிலச்சட்டம் 1935 ( )

agaram.lk

- **இல 11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. தூபராம - தேவநம்பியதீசன்
2. அபயகிரி - வட்டகாமினி அபயன்
3. ஜேதவன - மகாசேனன்
4. ரங்கொத் விகாரை - நிஸங்கமல்லன்
5. கடலாதெனி விகாரை - ஆறாம் பராக்கிரமபாகு ( )

12) 1. பண்டுகாபய - சுவர்ணபாலி
2. கல்லாடநாக - அனுலாதேவி
3. நிஸங்கமல்லன் - சுகலாதேவி
4. வலகம்பா - சோமாவதி
5. 1ம் விஜயபாகு - திரிலோக சுந்தரி ( )

13) 1. மகாவலிகங்கை - திருகோணமலை
2. வளவகங்கை - அம்பாந்தோட்டை
3. மாணிக்க கங்கை - கிரிந்த
4. நிலவள கங்கை - காலி
5. தெதுறு ஓயா - சிலாபம் ( )

14) 1. பொன்னம்பலம் - இலங்கை தேசிய காங்கிரஸ்
2. என். எம். பெரேரா - இலங்கை சமசமாஜக் கட்சி
3. டி. பி. ஜெயதிலக - சிங்கள மகா சபை
4. ஜீ. ஜீ. பொன்னம்பலம் - தமிழ் காங்கிரஸ்
5. ஏ. ஈ. குணசிங்க - தொழிற்கட்சி ( )

15) 1. கோல்புறூக் கொமிஷன் - இராஜகாரிய முறை ஒழிப்பு
2. மோர்கன் கொமிஷன் - பொதுப்போதனைத் திணைக்களம் நிறுவுதல்
3. டீ. மியூரன் கொமிஷன் - சிவில் சேவை நிறுவுதல்
4. டொனமூர் கொமிஷன் - சர்வஜன வாக்குரிமை
5. சோல்பரி கொமிஷன் - மந்திரிசபை முறை ( )

agaram.lk

- **இல 16 – 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| | X | Y |
|---|---|---|
| 1. | வாஜிரியவாத | A. தேவநம்பிய தீசன் |
| 2. | தந்ததாது | B. முதலாம் சேனன் |
| 3. | கேஸதாது | C. கஜபாகு |
| 4. | பத்தினி வழிபாடு | D. சிறிமேகவண்ணன் |
| 5. | போதிமரக்கிளை | E. சிலாகாலன் |

1. BDECA 2. BEDCA 3. BADEC 4. BDCEA 5. BAEDC ( )

17)

| | X | Y |
|---|---|---|
| 1. | சீலவம்ச தர்மகீர்த்தி தேரர் | A. சப்தர்மா லங்காரய |
| 2. | ஜயபாகு தம்பகீர்த்தி தேரர் | B. தேவவாத புராணய |
| 3. | ராஜகுரு தம்பகீர்த்தி தேரர் | C. சரசோதிமாலய |
| 4. | தம்மதின்ன விமலகீர்த்தி தேரர் | D. தாட்ட வம்சம் |
| 5. | தேனுவரைப் பெருமாள் | E. சத்தர்ம ரத்தினாகரய |

1. BADEC 2. BAEDC 3. BDCEA 4. BDECA 5. BEDCA ( )

18) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | கோல்புறூக் அரசியலமைப்பு 1833 | A. | சர்வஜன வாக்குரிமை வழங்கியமை |
| 2. | குறூமக்கலம் அரசியலமைப்பு 1910 | B. | சட்டசபையின் உற்பத்தி |
| 3. | மனிங் அரசியலமைப்பு 1920 | C. | மந்திரிசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டமை |
| 4. | டொனமூர் அரசியலமைப்பு | D. | மாகாணரீதியான பிரதிநிதிகள் தெரிவு ஆரம்பமானமை |
| 5. | சோல்பரி அரசியலமைப்பு | E. | வரையறுக்கப்பட்ட வாக்குரிமை |

1. BADEC 2. BAEDC 3. BDCEA 4. BDECA 5.BEDAC ( )

19)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | நில அளவைத் திணைக்களம் | A. | 1930 |
| 2. | தொல்பொருளியல் திணைக்களம் | B. | 1802 |
| 3. | நீர்ப்பாசனத் திணைக்களம் | C. | 1900 |
| 4. | விவசாயத் திணைக்களம் | D. | 1890 |
| 5. | கூட்டுறவுத் திணைக்களம் | E. | 1912 |

1. BDECA 2. BEDCA 3. BADEC 4. BDCEA 5. BAEDC ( )

20)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | சி.பட்டுவன்துடாவ | A. | தொழில் அமைச்சர் |
| 2. | C. W. W கன்னங்கரா | B. | உள்ளூராட்சி அமைச்சர் |
| 3. | டி. பி. ஜயதிலக | C. | உள்துறை அமைச்சர் |
| 4. | டி. எஸ். சேனநாயக்க | D. | கல்வி அமைச்சர் |
| 5. | பெரியசுந்தரம் | E. | விவசாய அமைச்சர் |

1. BDECA 2. BEDCA 3. BADEC 4. BDCEA 5. BAEDC ( )

- **இல 21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

agaram.lk

21) ரஜரட்ட நாகரிகத்தின் தளர்ச்சியும் வீழ்ச்சியும்.
1. சந்திரபானுவின் படையெடுப்பு.
2. நீர்ப்பாசன முறையின் சீர்குலைவு.
3. கலிங்க, பாண்டிய வம்சங்களுக்கிடையிலான பகைமை.
4. பலவீனமான அரசர்கள்.
5. மாகனின் படையெடுப்பு. ( )

22) யாழ்ப்பாண இராச்சியம்
1. யாழ்ப்பாண வைபவமாலை யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றைப் படிப்பதற்கான பிரதானமான மூலம் ஆகும்.
2. அதன் இராசதானி நல்லூர் ஆகும்.
3. ஆரியச் சக்கரவர்த்தி அரசர்கள் அதிக பலம் கொண்டவர்கள்.
4. ஆரியச் சக்கரவர்த்தி அரசர்கள் கம்பளை இராச்சியத்தின் மீது படையெடுத்தார்கள்.
5. அழகேஸ்வரன் யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றினான். ( )

23) முதலாம் பராக்கிரமபாகுவின் அயல்நாட்டுத் தொடர்புகள்.
1. பர்மா மீது படையெடுப்பு.
2. தென்னிந்தியாவில் பாண்டிய இராச்சியத்திற்கு எதிரான படையெடுப்பு.
3. காம்போஜத்தோடு நல்லுறவுகள்.
4. தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சமய நல்லுறவுகள்.
5. சீனாவுடன் வர்த்தக நல்லுறவுகள். ( )

24) நாயக்கர் வம்சம்

1. முதலாம் அரசன் விஜயராஜசிங்கன் ஆவான்.
2. நாயக்க மன்னர்கள் தென்னிந்தியக் குடும்பங்களோடு தொடர்ந்தும் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்தினர்.
3. கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் பௌத்தம், பௌத்த பண்பாடு ஆகியவற்றின் பேராதரவாளன்.
4. நரேந்திரசிங்கன் இறுதி நாயக்க மன்னனாவன்.
5. ராஜாதிராஜசிங்கனின் காலத்திலே பிரித்தானியர் கரையோர மாகாணங்களை கைப்பற்றினர். ( )

25) ஒல்லாந்தருக்கும் கண்டி மன்னர்களுக்குமிடையிலான தொடர்புகள்

1. ஒல்லாந்தர் முதலாம் விமலதர்ம சூரியனை 1602 இல் சந்தித்தனர்.
2. கண்டி மீதான ஒல்லாந்தர் படையெடுப்பும் 1766 ஆண்டு உடன்படிக்கையும்.
3. ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தை கைப்பற்றியமை.
4. 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கை.
5. உபசம்பதாவை நடத்தச் சீயத்திலிருந்து சங்கத்தாரை வரவழைப்பதற்குக் கண்டி மன்னருக்கு ஒல்லாந்தர் உதவி புரிந்தனர். ( )

- **இல 26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றிற்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**

(A) யும் (B) மட்டும் சரியாயின் 1 எனவும்
(B) யும் (C) மட்டும் சரியாயின் 2 எனவும்
(C) யும் (D) மட்டும் சரியாயின் 3 எனவும்
(A) யும் (C) மட்டும் சரியாயின் 4 எனவும்
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

agaram.lk

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) சமய வரலாற்றில் மகாசேனன் தொடர்பாக பின்வரும் குறிப்பு / குறிப்புக்களில் எது / எவை சரியானது சரியானவை?

A) வைதுல்யக் கோட்பாட்டை அறிமுகஞ் செய்தமை.
B) அநுராதபுரத்தில் மிகப் பெரும்சேத்தியதை (தூபியைக்) கட்டியவன் என்ற சிறப்பு மகாசேனனுக்குரியது.
C) அபயகிரி தாதுகோபத்தைக் கட்டியமை.
D) அவனுடைய காலத்தில் தேரவாத திரிபீடகம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. ( )

27) நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பாக பின்வருவனவற்றுள் எது / எவை சரியானது / சரியானவை?

A) பெருங்குளங்களை அமைத்த சிங்கள மன்னரில் முதலாம் வசபன் முதலானவன்.
B) இலங்கையின் நீர்ப்பாசன வரலாற்றில் எலஹா, மின்னேரி, கவுடுலுலு இணைப்புத் திட்டமானது ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்.
C) கலாவாவி என்னும் பெருங்குளத்தை மகாசேனன் கட்டினான்.
D) முதலாம் விஜயபாகு அரசன் மினிப்பே திட்டத்தை உருவாக்கினான். ( )

28) சீதவாக்கை இராச்சியம் தொடர்பான மேல்வரும் குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை?

A) மாயாதுன்னே சீதவாக்கை இராச்சியத்தின் முதலாம் அரசனாவான்.

B) முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தை சீதவாக்கைக்கு இணைத்தான்.

C) 1562 இல் நடைபெற்ற முல்லேரியாவப் போரில் இராஜசிங்கன் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தான்.

D) மாயாதுன்னே சைவசமயத்தைச் சேர்ந்து பெரண்டி கோயிலைக் கட்டினான். ( )

29) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனின் ஆட்சிக்காலம் தொடர்பாக மேல்வரும் கூற்று / கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?

A) அம்பன்வலராலவின் கலகம்.

B) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் நாயக்கர் வம்சத்து முதல் அரசன்.

C) சங்கத்தாரின் (பிக்கு) உபசம்பதா சடங்கு மீண்டும் ஏற்படுத்தப்பட்டமை.

D) 1766ம் ஆண்டு ஒல்லாந்தரோடு ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டமை. ( )

30) சோல்பரி அரசியல் திட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை சரியானது / சரியானவை?

A) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்றுக் குழு தொடர்ந்தும் இருந்தது.

B) சோல்பரி அரசியலமைப்பின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 1948ல் நடைபெற்றது.

C) இந்த அரசியலமைப்பின் மூலம் இரு சபைகளையுடைய பாராளுமன்றம் அமைக்கப்பட்டது.

D) இந்த அரசியலமைப்பின் மூலம் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) எலும்புகளை அடக்கம் செய்யும் முன்னர் சேற்றுக்கல் (சிவப்புசாயம்) பூசப்பட்டமை தொடர்பில் ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இடம் எது?

1. பெல்லன்பதி பெலஸ்ஸ 2. ராவணன் எல்ல 3. மினிஹால்கந்த
4. இப்பன்கட்டுவ 5. பட்டதொம்பலன ( )

32) புராதன இலங்கையின் அறிக்கை என்ற நூலின் ஆசிரியர் யார்?

1. ரிபைரோ 2. குவேரோஸ் 3. தகுடோ
4. பெல்தியஸ் 5. வெலன்டைன் ( )

33) பின்வருவனவற்றுள் எந்தச் சாசனம் முதலாம் பராக்கிரமபாகுவின் தென்னிந்திய படையெடுப்புகள் பற்றி குறிப்பிடுகின்றது?

1. திருவாலங்காடு 2. தேவநகல 3. கல்விகாரை
4. அம்பகமுவ 5. பொத்குல் விகாரை ( )

34) இலங்கையின் மகாதேசாதிபதியாகப் பதவி பெற்ற முதலாவது இலங்கையர் யார்?

1. டி. எஸ். சேனநாயக்க 2. ஜோன் கொத்தலாவல 3. ஒலிவர் குணதிலக
4. S. W. R. D. பண்டாரநாயக்க 5. வில்லியம் கோபல்லாவ ( )

35) பத்தொம்பதாம் நூற்றாண்டில் இந்து மறுமலர்ச்சியைத் தொடக்கியவர் யார்?

1. ஜீ. ஜீ. பொன்னம்பலம் 2 சரவணமுத்து 3. நடேச ஐயர்
4. ஆறுமுகநாவலர் 5. முத்துக்குமாரசுவாமி ( )

agaram.lk

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | சத்தாதிஸ்ஸனுடைய ஆட்சியில் பௌத்த சங்கத்திலே முதலாவது பிளவு ஏற்பட்டது. | முதலாம் விஜயபாகு சங்கத்தாரை ஐக்கியப்படுத்தியதோடு கதிகாவத என்னும் விதிக்கோவை ஒன்றினையும் பிரகடனப்படுத்தினான். ( ) |
| 37) | மன்னன் 2ம் பராக்கிரமபாகு கலிங்கத்து மாகனைத் தோற்கடித்தான். | இளவரசர்கள் விஜயபாகுவும் ஜயபாகுவும் அவனது இவ்வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர். ( ) |
| 38) | "மித்த சேனன்" மன்னன் காலத்தில் பாண்டியர் இலங்கையை ஆக்கிரமித்தனர். | வலகம்பா மன்னன் பாண்டியர்களிடம் இருந்து நாட்டை விடுவித்தனர். ( ) |
| 39) | காசியப்ப மன்னன் "சிகிரியா" என்னும் பலம் வாய்ந்த கோட்டையை கட்டுவித்தான். | இவன் மிகார என்னும் தளபதியின் ஆலோசனையின் பெயரில் இதனை பாதுகாப்புக்காக அமைப்பித்தான். ( ) |
| 40) | போர்த்துக்கேயர்கள் சில சுதேசிய சமூக பொருளாதார நிறுவனங்களைத் தங்கள் பொருளாதார நிலைமைகளுக்குப் பயன்படுத்தினார்கள். | போர்த்துக்கேயர் கறுவா முதலான பொருட்களைக் குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்வதற்கு, மரபு வழியான நிலபோக முறை, கட்டமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தினர். ( ) |

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணைப் பரீட்சை - 2020

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
6th Term Examination - 2020

FWC

இலங்கை வரலாறு - II
Sri Lankan History - II

தரம் - 13 (2020)

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் வழங்கப்படும்.**

### பகுதி A

01) உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்ட அனைத்து இடங்களையும் குறித்து பெயரிடுக.

| | | |
|---|---|---|
| 1. ஜம்புகோளம் | 2. லங்காபட்டினம் | 3. வட மாகாணம் |
| 4. காலி | 5. அலுவிகாரை | 6. யாப்பகூவ |
| 7. ராவண எல்ல | 8. மினிஹால்கந்த | 9. முல்லேரியா |
| 10. தந்துரே | 11. மல்வத்து ஓயா | 12. கலாவாவி |

(12x1=12 புள்ளிகள்)

### பகுதி B

02) "மகாசேனன் ஆட்சிக்காலம் முடியும் வரையான இலங்கை வரலாற்றை படித்துக் கொள்வதில் வம்ச வரலாற்று நூல்கள் சிறப்பான முக்கியத்துவம் கொண்டவை"

1) இப்பொழுது கிடைக்கின்ற வம்ச வரலாற்று நூல்களில் மிகப் புராதனமானது எது? (1 புள்ளி)

2) மகாவம்சத்தின் ஆசிரியரின் பெயரையும் அது எழுதப்பட்ட காலத்தையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) அநுராதபுர காலத்தில் எழுதப்பட்டுள்ள வம்ச வரலாற்று நூல்களைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்புரை எழுதுக. (5 புள்ளிகள்)

4) மேலே தரப்பட்ட குறிப்பினை நுணுக்கமாக பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)

03) "துட்டகாமினியின் சாதனைகளை மகாவம்சம் மிகைப்பட்ட புகழ்ந்துள்ளது"

1) துட்டகாமினியின் சாதனைகளை வர்ணிக்கும் மகாவம்சத்தின் ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

agaram.lk

2) துட்டகாமினிக்கு முன் மாகமவில் ஆட்சி புரிந்த அரசர் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

3) துட்டகாமினியின் அரசியற் சாதனை பறிற ஒரு சுருக்கமான கட்டுரை எழுதுக.

4) மகாவம்ச ஆசிரியர் எவ்வாறு துட்டகாமினியின் சாதனைகளை மிகைபட புகழ்ந்துள்ளார். என்பதை ஆராய்க. (8 புள்ளிகள்)

04) மகாசேனனின் ஆட்சிக்காலம் முதல் இரண்டாம் அக்கிரபோதியின் ஆட்சி முடிபுறும் வரை இலங்கையில் நீர்ப்பாசன முறை வளர்ந்தவற்றைச் சுருக்கமாகப் பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

05) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) அனுராதபுரகால தென்னிந்திய படையெடுப்பு

2) 2ம் பராக்கிரமபாகு

3) யாழ்ப்பாணமும் போர்த்துக்கேயரும்.

4) கோட்டைக்கால இலக்கியம் (8x2=16 புள்ளிகள்)

## பகுதி C

06) "போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து வெளியேற்றியதன் காரணத்தினாலும் அதே சமயம் ஒல்லாந்தரின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தியதனாலும் இரண்டாம் இராஜசிங்கனை ஒரு சிறந்த மன்னன் என்று கருதலாம்" இக்கூற்றினை விளக்குக.

(16 புள்ளிகள்)

07) "1817 – 1818 ஆகிய காலத்து கண்டியரின் எதிர்பியக்கம் இங்கையிலே பிரித்தானியருக்கு எதிரான முதலாவது சுதந்திரப் போராட்டமாகும்." போராட்டத்துக்கு ஏதுவான காரணங்கள் தொடர்பாக இக்கூற்றினை ஆராய்க.

(16 புள்ளிகள்)

08) 1848ம் ஆண்டு முதல் நடைமுறையிலிருந்த அரசியலமைப்பிலிருந்து 1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு எவ்வாறு வேறுபட்டிருந்தது என்பதைச் சுருக்கமாக ஆராய்க.

(16 புள்ளிகள்)

09) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) வெலிவிட்ட ஸ்ரீசரணங்க தேரர்.

2) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை.

3) 1956 பொதுத்தேர்தல்.

4) சுதந்திர இலங்கையின் பொருளாதாரக் கொள்கை.


(8x2=16 புள்ளிகள்)

agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education Northern Province**
**6th Term Examination - 2020**




agaram.lk